பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
15 02 2025 7 15
சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாடு முழுவதும் இதுவரை இல்லாத அளவிற்கு கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

2. பிரதமர் திரு. நரேந்திர மோடியின் முன்முயற்சியால் நாடு முழுவதும் விளையாட்டு கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. இந்திய ஜனநாயகம் ஆரோக்கியமான பாதையில் சென்றுகொண்டிருப்பதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

4. ஹமாஸ் பிடியில் இருந்து விடுவிக்கப்பட உள்ள 3 பிணைக் கைதிகளின் பெயர்களை இஸ்ரேல் அறிவித்துள்ளது.

5. மகளிர் ப்ரீமியர் லீக் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி – குஜராத் அணியை வென்றது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

நாடு முழுவதும் இதுவரை இல்லாத அளவிற்கு கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

லக்னோவில் பல்வேறு சாலை மேம்பாட்டுத்திட்டப்பணிகளுக்கு நேற்று அடிக்கல் நாட்டி அவர் பேசினார்.

நகர்ப்புற கட்டமைப்பு வசதிகளை மேமம்படுத்துவதற்காக கடந்த பத்தாண்டுகளில் 28 லட்சத்து 52 ஆயிரம் கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய சாலை போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு நிதின்கட்கரி, சர்வதேச தரத்திற்கு இணையான சாலை வசதிகள் நம் நாட்டில் ஏற்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் முன்முயற்சியால் நாடு முழுவதும் விளையாட்டு கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

உத்தராகண்ட் மாநிலம் ஹல்த்வானியில் 38வது தேசிய விளையாட்டுப் போட்டிகளின் நிறைவு விழாவில் நேற்று உரையாற்றிய அவர், இதனால் ஆரோக்கியமான விளையாட்டு சூழல் உருவாகியுள்ளதாக கூறினார்.

விளையாட்டு வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் ஊக்குவிக்கப்பட்டு வெளிப்படைத்தன்மையுடன் கூடிய தேர்வு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இது உலக அளவில் இந்திய விளையாட்டுத் துறையின் நற்பெயரை உயர்த்தியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் விளையாட்டுகளின் எதிர்காலம் பிரகாசமாக உள்ளது என்றும், ஃபிட் இந்தியா மற்றும் கேலோ இந்தியா போன்ற பிரதமர் எடுத்த முன் முயற்சிகள் மூலம் ஒவ்வொரு இளைஞரும் விளையாட்டில் ஆர்வமாக ஈடுபட முன்வந்துள்ளதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

<<<<>>>>

இந்திய ஜனநாயகம் ஆரோக்கியமான பாதையில் சென்றுகொண்டிருப்பதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஜெர்மனியில் உள்ள முனீச் நகரில் பாதுகாப்பு தொடர்பான மாநாட்டில் பேசிய அவர், இந்தியாவில் தேர்தல் நடத்தப்படும் விதம் குறித்து எடுத்துரைத்தார்.

தில்லியில் சமீபத்தில் நடைபெற்ற தேர்தல் மற்றும் கடந்த ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தல் அமைதியாகவும், சுமுகமாகவும் நடைபெற்று முடிந்துள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவில் நடைபெற்ற தேர்தல்களில் தகுதியுள்ள வாக்காளர்களில் மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமானோர் வாக்களித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

70 கோடிக்கும் அதிகமானோர் வாக்களித்தபோதும், ஒரே நாளில் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன என்றும், முடிவுகளை யாரும் ஆட்சேபிக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

உலக அளவில் ஜனநாயகம் சிக்கலில் உள்ளது என்ற கருத்தில் இந்தியா மாறுபடுகிறது என்றும், இந்தியாவின் ஜனநாயகத்தை முன்னிலைப்படுத்துவதாகவும் திரு. ஜெய்சங்கர் தெரிவித்தார்.

<<<<>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்...

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் நேற்றும், இன்று அதிகாலையும் கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் ஏராளமான பக்தர்கள் புனித நீராடினர்.

பக்தர்களின் வசதிக்காக ரயில் மற்றும் பேருந்து சேவை அதிகரிக்கப்பட்டுள்ளது.

வந்தேபாரத் சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளதாக வடக்கு மண்டல ரயில்வே தெரிவித்துள்ளது.

இந்த ரயில் புதுதில்லியில் இருந்து காலை மணி 5.30க்கு புறப்பட்டு பிரயாக்ராஜை நண்பகல் 12 மணிக்கு சென்றடையும் என்றும், பின்னர் வாரணாசிக்கு பிற்பகல் மணி 2.20க்கு சென்றடையும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரயாக்ராஜில் இருந்து மாலை மணி 5.20க்கு புறப்படும் வந்தேபாரத் சிறப்பு ரயில் இரவு மணி 11.50க்கு புதுதில்லி வந்தடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், 300க்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்கள் நேற்று கங்கை நதிக் கரையோரங்களில் மிகப்பெரிய தூய்மைப் பணியில் ஈடுபட்டனர்.

மூன்று படித்துறைகளில் நடைபெற்ற இந்தப் பணி, கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பெற உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கங்கை நதி மற்றும் படித்துறைப் பகுதிகளை தூய்மையாக வைத்திருக்க வேண்டிய அவசியத்தையும் தூய்மைப் பணியாளர்கள் பக்தர்களிடம் எடுத்துரைத்தனர்.

பிரயாக்ராஜில் உள்ள மோதிலால் நேரு தேசிய தொழில்நுட்ப நிலையத்தைச் சேர்ந்த பேராசிரியர்களும், மாணவர்களும் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு தூய்மைப் பணியாளர்களை உற்சாகப்படுத்தினர்.

இன்று 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்கும் தூய்மைப் பணி நடைபெற உள்ளதாக கும்பமேளா நிர்வாகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் 40 ஆண்டுகள் பழமையான குடிநீர் குழாய்களை மாற்ற வேண்டும் என்று அதிகாரிகளுக்கு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அறிவுறுத்தியுள்ளார்.

சென்னையில் நேற்று திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், கடலூர், விழுப்புரம், ராணிப்பேட்டை உள்ளிட்ட 10 மாவட்டங்களுக்கு உட்பட்ட மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப் பணிகள் குறித்து அதிகாரிகளுடன் அவர் ஆய்வு நடத்தினார்.

நகரப் பகுதிகளில் நகராட்சி நிர்வாகத்துறை சார்பில் நடைபெற்று வரும் குடிநீர், கழிவு நீர், சாலைவசதி போன்ற பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும் என்று அவர் கூறினார்.

கோடை காலத்தில் மக்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் அவர் வலியுறுத்தினார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரில் 7 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக தேர்தெடுக்கப்பட்ட அரசு சட்டப்பேரவையில் பட்ஜெட்டை தாக்கல் செய்ய உள்ளது.

இதற்காக யூனியன்பிரதேச சட்டப்பேரவையின் இரண்டாவது கட்ட கூட்டத்தொடர் அடுத்த மாதம் 3ஆம் தேதி தொடங்க உள்ளது.

ஆளுநர் உரையுடன் தொடங்க உள்ள இந்தக் கூட்டத்தொடர், ஏப்ரல் மாதம் 11ஆம் தேதி முடிவடையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யூனியன்பிரதேச அரசின் பட்ஜெட் அடுத்த மாதம் 7ஆம் தேதி தாக்கல் செய்யப்பட உள்ளது.

பட்ஜெட் மீதான விவாதம் மார்ச் 8ஆம் தேதி முதல் 11ஆம் தேதி வரை நடைபெறும் என்று எமது ஜம்மு செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

காங்கிரஸ் கட்சியில் அமைப்பு ரீதியாக சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

சத்தீஸ்கட் மாநில முன்னாள் முதலமைச்சரும், பொதுச்செயலாளருமான திரு. பூபேஷ் பாகல், பஞ்சாப் மாநிலத்திற்கான பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்

காங்கிரஸ் கட்சியின் மக்களவை உறுப்பின் சையத் நசீர் உசேன், ஜம்மு-கஷ்மீர் மற்றும் லடாக் பகுதிகளுக்கான பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் பொதுச் செயலாளர் திரு. ஹரிபிரசாத், ஹரியானா மாநிலத்திற்கான பொறுப்பாளராகவும், திரு. கிருஷ்ணா அலுவேரு பீஹார் மாநிலத்திற்கும், ரஞ்சனி பாட்டீல் ஹிமாச்சலப்பிரதேச மாநிலத்திற்கும் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

ஹமாஸ் பிடியில் இருந்து விடுவிக்கப்பட உள்ள 3 பிணைக் கைதிகளின் பெயர்களை இஸ்ரேல் அறிவித்துள்ளது.

கடந்த மாதம் ஹமாஸ் அமைப்புக்கும், இஸ்ரேலுக்கும் இடையே அமலுக்கு வந்த போர்நிறுத்த ஒப்பந்தத்தின்கீழ் பிணைக் கைதிகள் மற்றும் இஸ்ரேல் சிறையில் உள்ள பாலஸ்தீனர்கள் விடுவிக்கப்பட்டு வருகின்றனர்.

இருதரப்பினருக்கும் இடையே கைதிகளின் பரிமாற்றம் நடைபெற உள்ளது இது 6வது முறையாகும்.

கத்தார் மற்றும் எகிப்து நாடுகளின் மத்தியஸ்த முயற்சிகளின் மூலம் புதிதாக விடுவிக்கப்பட உள்ள இஸ்ரேல் பிணைக் கைதிகள் குறித்த பட்டியல் அந்நாட்டிடம் வழங்கப்பட்டது.

3 பிணைக் கைதிகளுக்கு ஈடாக 369 பாலஸ்தீன கைதிகளை இஸ்ரேல் விடுவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் நேற்று நிகழ்ந்த குண்டுவெடிப்பில் 11 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

படுகாயமடைந்த 7 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

நிலக்கரி சுரங்கத்திற்கு தொழிலாளர்களை ஏற்றிச் சென்ற வாகனத்தின் அருகே இந்த குண்டு வெடித்ததாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்த வெடிபொருள் சாலையில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக சந்தேகிக்கப்படுவதாகவும், கொல்லப்பட்டவர்களின் உடல்கள் அடையாளம் காணப்பட்டு வருவதாகவும் அவர்கள் கூறினர்.

சமீபகாலமாக பலுசிஸ்தானின் **Shaharag** பகுதியில் பல குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

அப்பகுதியில் நடைபெறும் சுரங்கப் பணியை சீர்குலைக்கும் நோக்கில் இத்தகைய தாக்குதல்கள் நடைபெறுவதாக காவல்துறையினர் சந்தேகிக்கின்றனர்.

<<<<>>>>

மகளிர் ப்ரீமியர் லீக் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி – குஜராத் அணியை வென்றது.

வதோதராவில் நேற்று நடைபெற்ற முதல் போட்டியில் முதலில் விளையாடிய குஜராத் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 201 ரன் எடுத்தது.

202 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய பெங்களூரு அணி, 18 புள்ளி 3 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு இலக்கை எட்டியது.

இன்று வதோதராவில் இரவு மணி 7.30க்கு நடைபெற உள்ள போட்டியில் தில்லி அணி – மும்பை அணியை எதிர்கொள்கிறது.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியில் சென்னை அணி இன்று பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

இந்தப் போட்டி இன்று மாலை 5 மணிக்கு சென்னையில் உள்ள ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் தொடங்குகிறது.

இரவு மணி 7.30க்கு நடைபெற உள்ள மற்றொரு போட்டியில் கேரள அணி – மோகன் பஹன் அணியை எதிர்கொள்கிறது.

முன்னதாக நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஒடிசா அணி, 3-1 என்ற கோல் கணக்கில் ஹைதராபாத் அணியை வென்றது.

<<<<>>>>

ஹாங்காங்கில் நடைபெறும் ஆசிய ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியின் அரை இறுதியில் இந்திய மகளிர் அணி இன்று ஹாங்காங் அணியை எதிர்கொள்கிறது.

ஆடவர் பிரிவில் இந்தியா இன்று மலேசியா அணியை எதிர்கொள்கிறது.

<<<<>>>>